# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் (NDDCB) பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது:-

1. பணிப்பாளர் நாயகம் (HM 2-1) - 01
2. பணிப்பாளர் (நிருவாகம்) (HM 1-1) - 01
3. பணிப்பாளர் (நிதி) (HM 1-1) - 01
4. சபை செயலாளர்/ சட்ட அலுவலர் (MM 1-1) - 01
5. விஞ்ஞான அலுவலர் (JM 1-1) - 05
6. உளவளத்துணை உதவியாளர் (MA 2-1) - 20

உளவளத்துணை உதவியாளர், விஞ்ஞான அலுவலர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2021.02.25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கும், 2021.02.25 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கும் இணங்க விண்ணபப்பபடிவங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டியதில்லை.

01. **பதவிப் பெயர் - பணிப்பாளர் நாயகம்**
**சேவை வகுதி - "சிரேஷ்ட முகாமையாளர்" HM 2-1**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**01.1 தகைமைகள்**

**01.1.1 வெளிநிலை விண்ணப்பதாரர்கள் (பின்வரும் தகைமைகள் 1 அல்லது 2)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூகவியல்/ உளவியல்/ மக்கள் தொடர்பாடல்/ முகாமைத்துவம்/ சமூக வேலைகள்/ சட்டம்/ வணிகவியல்/ இரசாயனவியல்/ கணக்கியல்/ தகவல் தொழில்நுட்பவியல்/ புள்ளிவிவரவியல் ஆகிய விடயத்துறைகளில் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட, பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்/ முகாமைத்துவம் பற்றிய தொழில்வாண்மை நிறுவனமொன்றில் கூட்டிணைவு உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேலே சொல்லப்பட்ட இளமாணிப்பட்ட தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின் அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ திணைக்களமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் 20 வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, குறைந்தபட்சம் இதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் இருந்தவராதல் வேண்டும்.

*அல்லது*

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூகவியல்/ உளவியல்/ மக்கள் தொடர்பாடல்/ முகாமைத்துவம்/ சமூக வேலைகள்/ சட்டம்/ வணிகவியல்/ இரசாயனவியல்/ கணக்கியல்/ தகவல் தொழில்நுட்பவியல்/ புள்ளிவிவரவியல் ஆகிய விடயத்துறைகளில் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேலே குறிப்பிடப்பட்ட கலாநிதிப் பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின் அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ திணைக்களமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமையாளர் மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட அதிசிறப்புநிலைக்கான சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலரொருவராக அனுபவம் பெற்றிருத்தல்.

**01.1.2 உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சிரேஷ்ட முகாமையாளர் சேவை வகுதியிலுள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அத்துடன்*

பன்முகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதிலும் அதேபோல் மனித மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடையதாக முகாமை செய்வதில் மெய்ப்பித்த தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

**01.2 சம்பள அளவுத்திட்டம்** - ரூ.(91,645 – 12 x 2,700 – 124,045)
*(சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**02. பதவிப் பெயர் - பணிப்பாளர் (நிருவாகம்)**
**சேவை வகுதி - "சிரேஷ்ட முகாமையாளர்" HM 1-1**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**02.1 தகைமைகள்**

**02.1.1 வெளிநிலை விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, முகாமைத்துவம்/ வணிகமாணி/ மனித வள முகாமைத்துவம்/ அரசாங்க நிருவாகம் ஆகிய விடயத்துறைகளில் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவியொன்றுக்கு உரிய விடயத்துறைக்குப் பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

அரசாங்க, அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில்/ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமையாளர் மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**02.1.2 உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுககுரி தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமையாளர் சேவை (MM) வகுதியின் தரம் I இல் குறைந்தபட்சம் 5 வருட காலத்திற்கு குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

**02.2 சம்பள அளவுத்திட்டம்** - ரூ. (80,295 – 15 x 2,270 – 114,345/-)

*(சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**03. பதவிப் பெயர் - பணிப்பாளர் (நிதி)**
**சேவை வகுதி ("சிரேஷ்ட முகாமையாளர்") HM 1-1**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

**03.1 தகைமைகள்**

**03.1.1 வெளிநிலை விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 01 அல்லது 02)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, நிதி/ கணக்கியல்/ வணிகவியல் ஆகிய விடயத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

*அல்லது*

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்புரிமையைப் பெற்றிருத்தல் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA) உறுப்புரிமையைப் பெற்றிருத்தல் அல்லது பட்டய சான்றிதழ் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் (ACCA) உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவியொன்றுக்கு உரிய விடயத்துறைக்கு பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்கூறிய முதலாவது பட்டயத் தகைமையைப் பூர்த்திசெய்த பின் அரசாங்க, அரச கூட்டுத்தாபனமொன்றில்/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் முகாமையாளர் மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**03.1.2 உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முகாமையாளர் சேவை (MM) வகுதியில் தரம் I இல் குறைந்தபட்சம் 5 வருடங்கள் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.)

**03.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ. (80,295 – 15 x 2,270 – 114,345/-)**

*சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**வயதெல்லை :** (மேற்கூறிய 01, 02, 03 ஆகிய பதவிகளுக்கானது)

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

**04. பதவிப் பெயர் - சபை செயலாளர்/ சட்ட அலுவலர்**
**சேவை வகுதி – "முகாமையாளர்" - MM 1-1**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**04.1 தகைமைகள்**
**04.1.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தலும் உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக இருத்தலும்.

*அத்துடன்*

சட்டத்தரணி ஒருவராகவும் நொத்தாரிசு ஒருவராகவும் 03 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**04.1.2 உள்வாரி விண்ணப்பதாரிகள்**
மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**04.2 சம்பள அளவுத்திட்டம்** - ரூ. (53,175 – 10 x 1,375 – 15 X 1,1910 – 95,575/-)

*சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**05. பதவிப் பெயர் - விஞ்ஞான அலுவலர்**

**சேவை வகுதி – "கனிஷ்ட முகாமையாளர்" JM 1-1**

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 05**

**05.1 தகைமைகள்**

**05.1.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, இரசாயனவியலில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேற்கூறிய இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின் குறித்த துறையில் 01 வருட கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**05.1.2 உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு (பின்வரும் தகைமைகள் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத சேவை வகுதியில் தரம் II இற்கு உரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சார்ந்த சேவை வகுதியில் தரம் II இற்கு உரிய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
4. வினைப்படுத்தும்/ செயற்படுத்தும்/ விரிவாக்கல் அலுவலர் சேவை வகுதியின் பதவியொன்றில் 08 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**05.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ.42,600 – 10x775 – 18x 1,135 – 70,580)**

*(சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**வயதெல்லை (மேற்கூறிய 04, 05 ஆகிய பதவிகளுக்காக)**

22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு இந்த உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

**06. பதவிப் பெயர் - உளவளத்துணை உதவியாளர்**

**சேவை வகுதி – "முகாமைத்துவ உதவியாளர்" தொழில்நுட்ப MA2-1**

**பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கை – 20**

**06.1 தகைமைகள்**

**06.1.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் திறன் (NVQ) மட்டம் ஐந்து(05)க்குக் குறையாத மட்டத்தில் குறித்த துறையில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

*அல்லது*

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சையில் குறைந்தபட்சம் பரீட்சையில்குறைந்தபட்சம் மூன்று பாடங்களில்(பொது (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*அத்துடன்*

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் உளவளத்துணை/ சமூகவியல்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக வேலைகள் ஆகிய விடயத்துறைகளில் ஒன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத கால டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்.

**06.1.2 உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் ஏற்புடைத்தாகும்.

**06.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ.30,310 – 10x300 – 7x350 – 4x495 – 20x660 – 50,940)**

*(சம்பளம் தவிர அரசாங்கம் அனுமதித்த படிகளும் சிறப்புரிமைகளும் உரித்தாகும்.)*

**06.3 வயதெல்லை**

18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

**வேறு விடயங்கள்:**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, பதவிக்கு ஒப்படைக்கப்படும் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் தேவைப்படும் உடல் மற்றும் உள ஆரோக்கியம்

கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதோடு, சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

**விண்ணப்பிக்க வேண்டிய மொழிமூலம்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஆங்கில மொழியில் மாத்திரம் தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்புத் திட்டம்**

நியமன அதிகாரியினால் முடிவுசெய்யப்படுகின்றவாறு எழுத்துமூல போட்டிப் பரீட்சையொன்றின் அத்துடன்/அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தரமானதும், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

**விண்ணப்பக் கட்டணம்**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500 தொகையை எந்தவோர் இலங்கை வங்கிக் கிளையிலும் **'தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை'** என்ற பெயரில் **இலங்கை வங்கி இராஜகிரிய கிளையில் 1643** என்ற வங்கிக் கணக்கு இலக்கத்தில் வைப்புச் செய்து, அவ்வாறு பணம் வைப்புச்செய்த பத்திரத்தின் பிரதியொன்றை தங்கள் கைவசம் வைத்துக்கொண்டு அதன் மூலப்பிரதியை (Deposit Slip) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

தங்களது தகவல்களை 'A4' அளவில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணையத்தளத்திலுள்ள (www.nddcb.gov.lk) மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி (உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு) உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023.11.17 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் ***'பணிப்பாளர் நாயகம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை', இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய'*** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அரச/கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை நிறுவன/திணைக்கள தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்திராத விண்ணப்பங்களும், பூரணமற்ற விண்ணப்பங்களும், உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும், காசுக் கட்டளை இணைக்கப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி பிந்தி கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.**

**தவிசாளர்,**
**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,**
**383, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

வெளியீட்டுத் திகதி: 2023.11.03